



- வாழ்வோம்

# வலையோசை

சோஷியல் மீடியாவில் சுற்றி வரும் சுவாரஸ்யங்கள்... உங்களுக்காக!

Facebook




**D S Gauthaman**

திருச்சி சமயபுரத்தில், முழுமையாக விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்யணும்னு சொல்லி, விவசாயிகள் தொடர் போராட்டத்தில் இறங்கியிருக்காங்க. போராடும் விவசாயிகள் பந்தல் போடுவதற்கு போலீஸ் அனுமதிக்கல... விவசாயிகளுக்காகக் காய்ச்சிய கஞ்சியையும் கொண்டுவர போலீஸ் அனுமதிக்கல... இத்தனை அடக்குமுறைகளைச் செய்துட்டு, தற்போது விவசாயிகளைச் சந்தித்துப் பேசிட்டு இருப்பவர் அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ்! அவரோட கடுமையான உடல்மொழியைப் பாருங்க... இதுவா விவசாயிகளிடம் சமாதானம் பேசும் உடல்மொழி? விவசாயத் துறை அமைச்சர், பக்கத்துல தேமேன்னு உட்கார்ந்திருக்கார்!

அப்போ, அறநிலையத் துறை அமைச்சர் பெரிய கெட்டிக்காரரான்னு பார்த்தால், மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கு நிகழ்ச்சியில் பரபரப்பாக இயங்கியவர், மின் துறை அமைச்சர் நிர்மல் குமார் தான்.... அதேவேளை, நிர்மல் குமாரோட மின் துறை சார்ந்த கேள்விக்கெல்லாம் ஆதவ் அர்ஜுனா பதில் சொல்வார். இப்டி சங்கிலித்தொடர் மாதிரி போயிட்டே இருக்கும். இதுல என்ன விஷயம்னா, யாருக்கும் அவங்கவங்க துறை சார்ந்த நாலெட்ஜ் கிடையாது! ஒரு சிலர், கத்துக்கணும்னாவது நினைக்கிறாங்க. இன்னும் சிலர் பெருசா கண்டுக்கறதேயில்ல. சொல்லப்போனா, பொதுமக்களின் பிரச்சினை என்ன, அவங்களோட கஷ்டம் என்னன்னு கூட அமைச்சர்களில் முக்கால்வாசி பேருக்குத் தெரியாது! ரசிகர் மன்றம் வச்சு, எப்படா படம் வரும்... கட்டவுட் வைப்போம்... வைப் பண்ணுவோம்னு கொஞ்சம் சொகுசா வாழ்ந்திருப்பாங்க... வீட்டைப் பற்றிகூட சிந்திக்காம வளர்ந்திருப்பாங்க! அவங்கள்ட்ட திடீர்னு நாட்டு மக்களுக்கான பெரிய பொறுப்பை தூக்கிக்கொடுத்தா, திணறத்தான செய்வாங்க!

அதான் மச்சான், என்னோட டிபார்ட்மென்ட்ல பிரச்சினைடா... உடனே வாடான்னு அவங்கள இவங்க கூப்பிடுறதும்... இவங்கள அவங்க கூப்பிடுறதும்... ஒருத்தர் இன்னொருத்தருக்காகப் பேசுறதுமா பண்ணிட்டு இருக்காங்க! இதுல முதலமைச்சர், விவசாயிகள் பிரச்சினையா.... தூய்மைப் பணியாளர்கள் பிரச்சினையா... மருத்துவர்கள் பிரச்சினையா... பக்தர்கள் பிரச்சினையா... குடிநீர் பிரச்சினையா... எந்த பிரச்சினைக்கும் வாய் திறக்க மாட்டார்... பத்திரிகையாளர்களைச் சந்திக்க மாட்டார்... ஆனால், தேவதூதர் மாதிரி திடீர்னு மக்கள் முன்னாடி காட்சி தருவார்... ஆர்ட்டீன் விடுவார்... கைய கழுத்துக்கு குறுக்கால நீட்டி, ஆக்சன் காட்டுவார்.... இன்ஃப்ளுயன்ஸர் ஜோம்பிகள் உடனே 'பாத்துட்டேன்... பாத்துட்டேன்... நேர்ல பாத்துட்டேன்!'னு கத்தி கூப்பாடு போடுங்க!... இதுதான் இப்ப வழக்கமா நடக்குது! எப்டி இருந்த தமிழ்நாடு இப்டி ஆகிடுச்சுல்ல!

X



**BLACK**

சென்னை விமான நிலையத்தின் செயல்பாடுகளில்.. சில அம்சங்களில் அதிருப்தியாம்! அதனால், அதை நிர்வகிக்கும் நிறுவனத்தையே மாற்றக் கோரி, நமது முதலமைச்சர் பிரதமருக்கு ரகசிய கடிதம் எழுதியிருப்பது மிகப்பெரிய அதிர்ச்சிச் செய்தியாக வெளிவந்துள்ளது.

'இந்திய விமான நிலையங்கள் ஆணையம்' (AAI) அல்லாத வேறு ஒரு நிறுவனத்திடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்குமாறு, இதற்காகவே இத்தனை ஆண்டுகள் காத்துக்கொண்டிருந்த நரியிடம் (பா.ஜ.க. அரசிடம்) கெஞ்சிக் கேட்பது, தனியாருக்கு சிவப்புக்கம்பளம் விரித்து, அதானிக்கோ அல்லது ஆந்திரா ரெட்டி லாபிக்கோ தமிழ்நாட்டைத் தாரைவார்க்கத்தானே?

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி நிறுவனமான 'டிட்கோ' (TIDCO) உருவாக்க நினைத்த பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை ரத்துசெய்ததன் பின்னால் இருந்த சதித் திட்டம் என்னவென்று இப்போது எல்லோருக்கும் புரிந்துவிட்டதா?

சுதந்திர தினத்திற்கும் காந்தி ஜெயந்திக்கும்கூட வித்தியாசம் தெரியாத இந்த அறிவிலி அரசுக்கு, ஒரு சாலையின் நடுவே சிறிய 'டிராஃபிக் ஐலேண்ட்' (Traffic Island) கட்டக்கூட முறையாக டெண்டர் விடத் துப்பில்லாத அரசு, ஒரு விமான நிலையம் கட்டும் என்று எதிர்பார்ப்பது எப்பேர்ப்பட்ட முட்டாள்தனம்.

அடுத்த 5 ஆண்டுகளில், பா.ஜ.க. சொல்வதையெல்லாம் கேட்டு தலையாட்டிவிட்டு, தமிழ்நாட்டைக் கூறு போட்டு, தெருத் தெருவா கூவிக்கூவி விற்று, நம் மாநிலத்தை 25 ஆண்டுகள் பின்னோக்கி இழுத்துச் செல்வதைப் பார்க்கவேண்டிய துர்பக்கியத்தை ஏற்படுத்தி விட்டார்கள்.

## த.வெ.க. ஆட்சியில் விலைபோகும் தமிழ்நாடு!

`பா.ஜ.க.வின் தனியார்மயக் கொள்கையைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தும் அதிகாரபூர்வ ஏஜென்ட்டாக உருவெடுத்துள்ளது, விஜய்யின் த.வெ.க. அரசு' என விமர்சனம் செய்துள்ளார், கழகத்தின் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா. அவரது பதிவில்...

``தி.மு.க. மற்றும் இடதுசாரி இயக்கங்கள், பொதுத் துறையை விற்பனை செய்யும் ஒன்றிய அரசின் போக்கைத் தொடர்ந்து கடுமையாக எதிர்த்துவருகின்றன. ஆனால், சென்னை விமான நிலைய நிர்வாகத்தை அதானிக்குத் தாரைவார்க்க வேண்டி, கடந்த ஆகஸ்ட் மாதமே பிரதமர் மோடிக்கு ரகசியக் கடிதம் எழுதியுள்ளார், இந்த DUMMY முதலமைச்சர் விஜய். இந்தியாவிலேயே ஒரு மாநில அரசு இவ்வளவு வெளிப்படையாகத் தனியார்மயத்தை ஆதரிப்பது இதுவே முதல்முறை.

பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டால், உடனே விமான நிலைய நிர்வாகத்தை மாற்றி விடலாம் என நினைக்கும் அளவுக்கு அடிப்படை நிர்வாக அறிவு கூட இல்லாத தற்குறிகள் கையில் ஆட்சி சிக்கியிருக்கிறது.

இதிலுள்ள சிக்கல்களை 2007-ஆம் ஆண்டிலேயே தீர்க்க தரிசனமாக உணர்ந்துதான், மீனம்பாக்கத்தை மட்டுமே நம்பியிருக்காமல், ஸ்ரீபெரும்புதூரில் இரண்டாவது விமான நிலையத்தை முன்மொழிந்தார், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். ஆனால், வழக்கமான அரசியல் காழ்ப்புணர்ச்சியால் தி.மு.க.வின் ஆலோசனைகளைக் கிடப்பில் போட்ட ஜெயலலிதா, 2013-இல் தனியார்மயமாக்க முயன்று, படுதோல்வி அடைந்தார். இன்று, அதே ஜெயலலிதா வழியில் செல்கிறார் விஜய்.

உண்மையில், சென்னைக்கான இரண்டாவது விமான நிலையத் திட்டத்தில் உள்ள சிக்கல்களைத் தீர்க்க துப்பில்லாத இந்த த.வெ.க. அரசு, பா.ஜ.க.வின் அறிவுரைப்படி அதானிக்கு சிவப்புக்கம்பளம் விரிக்கிறது. தீவிரமான தனியார்மயம் மூலம் தமிழ்நாட்டை பா.ஜ.க.விடமும் அதானியிடமும் விற்றுவிட விஜய் தயாராகிவிட்டார். தமிழ்நாடு முழுமையாக விலைபோவதற்குள், விஜய்யை ஆட்சியை விட்டு விரட்ட, தமிழ்நாட்டு மக்கள்தான் தயாராக வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஃப்ளாஷ்பேக்



## தலைவர் மீண்டும் முதல்வராக, வாழ்த்து மடல்!



கோல்டன் பஷீர்

1987-ஆம் ஆண்டு, செய்யாறு நகரத்தில் நடைபெற்ற முன்னாள் எம்.எல்.ஏ. அண்ணன் பாபு ஜனார்த்தனம் அவர்களின் மணிவிழா நிதி அளிப்பு பொதுக்கூட்டத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது, தலைவர் மீண்டும் முதல்வராக வேண்டும் என்ற வாழ்த்து மடல் வாசித்து வழங்கினேன். மேடையில் அண்ணன் ஆற்காட்டார், புலவர் கோவிந்தன் ஆகியோர் இடம்பெற்றுள்ள இந்தப் படம், காலத்தால் மறக்க முடியாது.

**– கோல்டன் பஷீர்,**
**கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர்,**
**வந்தவாசி நகரம், திருவண்ணாமலை மாவட்டம்.**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com




# தெரிந்து கொள்வோம்

| 1949 | 1950 | 1953 | 1953 | 1953 | 1956 |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் 25, திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் அறிவிப்பு. | ஆகஸ்ட் 27, கழகப் பணிகள் வாடகை வீட்டிலிருந்து தொடக்கம். | ஜனவரி 4, கைத்தறியாளர் ஆதரவு நாள் தொடங்கியது கழகம். | ஜூலை 15, கல்லக்குடி பெயர் மாற்றத்துக்கு எதிரான போராட்டம். | தஞ்சை - திருச்சி புயல் நிவாரணம் ரூ.27,535 நிதி திரட்டிய கலைஞர். | ஆகஸ்ட் 21, மகளிர் மன்றம் உருவானது. பின்னர் மகளிர் அணியானது. |

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900